புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கிறித்துவ வரலாற்று நாவல்களில் மெய்யியல் நோக்கு

***Philosophical view in Christian Historical Novels***

*ஆய்வாளர்*
*ஜார்ஜ் இம்மானுவேல் . ஜோ,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020.*
***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***

*நெறியாளர்*
*அ. தௌஃபீக் ரமீஸ்*
*உதவிப் பேராசிரியர்*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*சமுதாய நாவல்கள், புலனாய்வு நாவல்கள் என ஆரம்பித்த தமிழ் நாவல் பரப்பின் உள்ளடக்கம் மெல்ல க.நா.சு காலத்தில் எதார்த்தவியல் நாவல்களாக மாற்றமடைந்தன. ஒருபுறம் பொதுஜனப் பரப்பில் வரலாற்று நாவல்கள் பரவலாக வாசிக்கப்பட, மறுபுறம் மனிதத்தையும் அன்றாடச் சிக்கல்களையும் பாலியல் ஆவேசங்களையும் பேசும் நாவல் படைப்புகள் தமிழ்ச் சூழலில் தீவிர வாசிப்புக்குள்ளாகின. இக்காலத்தில் மாய எதார்த்த, சோசியலிஸ, பின்-நவீனத்துவ நாவல்கள் எனப் பலவகை உருவாகியிருப்பினும், மெய்யியல் விசாரணையை முதன்மை நோக்கமாகக் கொண்ட நாவல் படைப்புகள் அரிதாகவே வந்துள்ளன. அவ்வகையில், இக்கட்டுரை கிறித்துவச் சமயத்தைப் பாடுபொருளாகக் கொண்டு அதன் சமய நம்பிக்கையையும் ஆளுமைகளையும் புனைவாக்கியுள்ள பிரதிகளைத் திறனாய்கிறது.*

***திறவுச் சொற்கள்:*** *அமலன் ஸ்டான்லி, வளன், கிறித்துவம், ஞானம், மெய்யியல், அறிவாராய்ச்சியியல், மறைக்கப்பட்ட வரலாறு.*

***முன்னுரை:***

*தமிழில் எழுதப்பட்டுள்ள நாவல்களில் கிறித்துவம் சார்ந்தவை கணிசமாக இருந்தாலும், கிறித்துவ மெய்யியல் தேடல் கொண்ட நாவல்கள் வெகுசிலவே. கிறித்துவச் சமயப் பின்புலம் கொண்ட எழுத்தாளர்கள் அதிகமில்லை என்பதே அதற்கான காரணம் எனலாம்.*

மெய்யியல் என்ற சொல்லுக்குப் பல்வேறு ஆய்வாளர்களும் அறிஞர்களும் பலவிதமான விளக்கங்களை, வரையறைகளைத் தந்திருந்தாலும், இவ்வாய்வாளரும் அவர் கண்டுகொண்ட பொருளை முன்வைத்து அதன்வழி நின்று மெய்யியல் பிரதிகளைத் தேர்ந்தெடுத்து ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சிக் கட்டுரை, விளக்கமுறைத் திறனாய்வு மற்றும் ஒப்பியல்முறைத் திறனாய்வின்படி ஆராயப்பட்டுள்ளது.

**கிறித்துவ வரலாற்று நாவல்களில் மெய்யியல்:**

மெய் + இயல் = மெய்யியல். மெய் என்பதற்கு உடல், உண்மை என்று இருபொருளிருப்பினும் இக்கட்டுரையில் அது உடல் என்ற பொருளில் கையாளப்படவில்லை. *(சாருவாகர்களின் 'மெய்' என்பது 'உடல்' என்ற பொருளுக்குப் பொருத்தமானதே. அவர்கள் ஸ்தூலத்தையே உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் பிரிவினர்.)* ஏனைய இறை வழிபாட்டுச் சமயங்கள் கருத்து முதல்வாதக் கொள்கை உடையவை என்பதாலும், கருத்துமுதல்வாதம் நம்பிக்கையுடன் தொடர்புடையது என்பதாலும் அதற்கு 'உடல்' என்னும் பொருள் பொருந்தாது. உண்மைதான் மெய்யியலின் முதன்மை அம்சம் என்றால் எது உண்மை? என்ற கேள்வி முறப்படும். சிவப்புத் திரையிட்ட கண்களால் ஆரஞ்ச் பழத்தைப் பார்ப்பவன், ஆரஞ்சின் நிறம் ஆரஞ்ச் என்று சொல்வது உண்மையாகாது. சிவப்பு + மஞ்சள்-இன் சேர்கையில்தான் ஆரஞ்ச் வண்ணம் வெளிப்படும். தட்டையாகப் பார்க்கவென வடிவமைக்கப்பட்டிருக்கும் மனிதக் கண்களால் பூமி தட்டையானது என்றுதான் பார்க்கமுடியும். பூமி உருண்டை என்று உணர்ந்துகொள்ள மனிதர்களுக்கு வெறும் கண்கள் மட்டும் போதவில்லையே. குருடன் யானையின் துதிக்கையை மட்டும் தொட்டுப் பார்த்துவிட்டு அதுவே யானையின் வடிவம் என்று சொல்வதுபோல, உண்மையானது, மனித எழுவாயைப் பொறுத்து மாறுபடுகிறது. ஆனாலும், சில உண்மைகள் உணர்ந்துகொள்ளக் கூடியவை. எடுத்துக்காட்டாக: புகையைக் கண்டதும் அங்கே நெருப்புள்ளது என்று தெரிந்துகொள்கிறோம். பழுத்த மாங்கனிகள் அனைத்தையும் சுவைக்காவிடினும் அப்பழங்களின் சுவை இனிப்பு என்ற உண்மையைத் தெரிந்துகொண்டுள்ளோம். இப்போது சொன்ன உதாரணங்கள்கூட, மனிதப் பின்புலத்திலிருந்து சொல்லப்பட்டவைதான். ஒரு பூச்சிக்கு மாம்பழம் மனிதனின் சுவை மொக்குகளுக்குத் தரும் அதே சுவையைத் தராது. ஆக, உள்ளதை உள்ளதென்று நம்மால் பார்க்கவும் சொல்லவும் முடிவது இல்லை. ஆயினும் மனிதனுக்கு அகப்படும் தோற்றத்தை வைத்தே அவர்களது அளவீடுகள் உள்ளன என்பதை மறுக்கமுடியாது. அதனால்தான் பிரோட்டோகோரஸ், *"மனிதனே எல்லாப் பொருள்களுக்கும் அளவுகோல்," (சி. இராமலிங்கம், அறிவியல் சார்ந்த மெய்ப்பொருளியலின் தோற்றம், ப.196)* என்ற கருத்தை முன்வைத்தார். அதுவே அறிவாராய்ச்சியியல் தொடர்ந்து வளரக் காரணமாய் அமைந்தது.

*"அணு, உயிர், பிரபஞ்சம், நாற்காலி, மேஜை போன்று இந்த உலகத்தில் எப்படியானவையெல்லாம் இருக்கின்றன என்று பட்டியலிடுவது இருப்பாய்வியல் Ontomology என்றழைக்கப்படுகிறது – இது தத்துவத்தின் உட்பிரிவாகிறது. இவை குறித்தெல்லாம் நாம் எப்படியான வழிகளில் அறிந்துகொள்கிறோம் என்பது அறிவு குறித்த வாசிப்பாகிறது. இது அறிவறிதல் Epistemology என்றழைக்கப்படுகிறது." (சுந்தர் சருக்கை, அறிவியல் என்றால் என்ன? ப.99)* இவ்வறிவாராய்ச்சியியலைத் தத்துவத்துடன் இணைத்துப் பார்க்காமல், ஒரு மெய்யியல் பிரதியை முழுமையாகத் திறனறிந்துகொள்ள இயலாது.

*"'தத்துவமும் அறிவாராய்ச்சியியலும் ஒன்றைச் சார்ந்து மற்றொன்று அமைவதுடன் மெய்யறிவுத் தேட்டத்தில் ஒன்றையின்றி மற்றொன்று செயல்படாது என்பார் வி. பி. மாண்டேகு.'" (கந்தசாமி . சோ. ந, தத்துவ நோக்கில் தமிழிலக்கியம், ப.10)* என்னும் கருத்து

இதனை மெய்ப்பிக்கிறது. இவ்வாய்வுக் கட்டுரைக்காக, கிறித்துவச் சமயத்தின் மெய்யியல் பார்வையை முன்வைக்கவும் அதன் அமைப்புக் கட்டுமானத்தின் மீதான விமர்சனத்தைப் பகிரவும் கிறித்துவின் வாழ்க்கையைப் பேசவும் செய்துள்ள நாவல்கள், எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கிறித்துவ தத்துவத் தேடலை ஒரு கதாப்பாத்திரத்தின் வழி மேற்கொள்ளும் ஜோ டி குருஸின் 'யாத்திரை' நாவல், வரலாற்றுக் களத்தில் அமையாமையாலும் தனியாளுமை நோக்கில் ஆய்வுச் செய்யப்பட வேண்டி இருப்பதாலும் இக்கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இத்தேர்வின் அடிப்படையில்,

கிறித்துவைக் கதாப்பாத்திரமாகக் கொண்டிருக்கும் வரலாற்று மெய்யியல் புனைவுகளாக,

அ. அமலன் ஸ்டான்லி எழுதிய 'ஔவிய நெஞ்சம்'

ஆ. வளன் எழுதிய 'யூதாஸ்'

ஆகிய இரு நாவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

கிறித்துவச் சமய நம்பிக்கையின் மீதான விசாரணைகள், தர்க்கங்கள், கேள்விகள், மறை அர்த்தங்கள் போன்றவை இந்நாவல்களில் துலங்கும் என்பது இக்கட்டுரையின் கருதுகோளாக அமைகிறது.

**அ. அமலன் ஸ்டான்லி எழுதிய 'ஔவிய நெஞ்சம்'**

'ஔவிய நெஞ்சம்,' 'யூதாஸ்' ஆகிய இரு நாவல்களும் இயேசு காலத்து வரலாற்றுப் புனைவுகளாக வந்துள்ளன. அமலன் ஸ்டான்லி தனது நாவலை விவிலியம் கூறும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டும் கிறித்துவத்தின் அடிப்படைப் பண்பான அன்பு, மன்னித்தல், மனம் திரும்புதல் ஆகியவற்றைக் கொண்டும் கிறித்துவைக் காட்டிக்கொடுத்தவன் என்று இன்றளவும் உலகத்தாரால் தூற்றப்படும் யூதாஸை மையமாக வைத்தும் எழுதியிருக்கிறார்.

**கதைக்களம்:**

யூதர்கள், ரோமப் பேரரசிற்கு அடிமைப்பட்டுக்கிடந்ததால் அவ்வடிமைத் தளையிலிருந்து தங்களை மீட்கவெனக் கடவுளால் அனுப்பப்படும் மீட்பர் வருவார் என யூத மக்கள் காத்திருக்கின்றனர். ரோம சாம்ராஜ்ஜியத்துக்கு எதிரான போராளி குழுக்கள் உருவாகும் போதெல்லாம் அதன் தலைவர்கள் 'மீட்பர்' என்றுதான் சுட்டப்படுகின்றனர். இயேசுவும் அப்படித்தான் சுட்டப்படுகிறார். இயேசுவின் சமகாலத்தில் பலரும் 'மீட்பர்' என்ற பெயரில் அறியப்பட்டிருந்ததால், அவரை வேறுபடுத்திக் காட்டவேண்டுமென அவரது பிறந்த ஊரான நாசரேத்தைப் பெயருக்கு முன்னொட்டாக வைத்து, 'நசரேனியனாகிய இயேசு கிறிஸ்து' என்று அழைக்கின்றனர்.

யூத இனத்தில் பிறந்த யூதாஸ், இயேசு தங்கள் இனத்தை ரோமக் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டு அரசனாக மூடிசூட்டிக்கொள்வார் என்றே அவரைப் பின் தொடர்ந்து செல்கிறான். ஆனால் இயேசு என் அரசாட்சி பூலோகத்திற்கானது அன்று; அது பரலோகத்தின் பாற்பட்டது. இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுதலே தன் பணி என ஆயுதம் ஏந்தாதிருக்கிறார். தன்னைச் சந்திக்க வரும் ஆயிரக்கணக்கான மக்களை யூத இன மீட்பிற்கான படையாக மாற்றாமல் விரட்டிவிடுகிறார். உவமைகளாலும் அற்புதங்களாலும் மெய்ஞ்ஞானத்தைத்தான்

*உயர்த்திப் பிடிக்கிறார் என அதிருப்தி கொள்கிறான் யூதாஸ். இறுதியில், யூத மத ஆசாரிகளின் நயவஞ்சகப் பேச்சால் ஏமாற்றப்பட்டு, இயேசு இருக்கக்கூடிய இடத்தைக் காட்டித் தருகிறான். அச்செயலால் இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறக்கிறார். தன் செயலுக்கு வருந்தி யூதாஸும் தற்கொலை செய்துகொள்கிறான்.*

***வரலாற்றுப் பதிவுகளின் இடைவெளியை நிறைக்கும் புனைவு:***

*வரலாற்றுப் புனைவின் முக்கியமான அம்சம், அது வரலாறு கையளித்துள்ள தகவல்களுக்கு இடையேயான நிகழ்வுகளை அனுமானித்து அவற்றைப் புதிய கோணத்தில் புனைவினால் நிரப்புவது. இந்நாவல் அதைத் திறம்படச் செய்கிறது. இயேசுவினால் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்ட லாசரு, தன்னை உலகம் எவ்வாறு பார்க்கிறது, வீட்டாரும் சுற்றத்தாரும் தன்னை எப்படி அணுகுகின்றனர் என்று பார்க்கின்றான். மரணத்திலிருந்து உயிர்த்தவனின் எண்ணவோட்டம் என்னவாக இருக்கும்; வாழ்விற்கான அர்த்தமென அவன் விளங்கியது என்ன? போன்றவை துல்லியமாக அலசப்படுகின்றன.*

*இயேசுவின் சீடர்களுக்கு மத்தியிலான சச்சரவுகள், பொறாமைகள், பசிகள், அலைக்கழிப்புகள் எனப் பல கோணங்களை நாவலாசிரியர் பதிவு செய்கிறார், நாவலாசிரியர். இறை அவதாரம் என்று போற்றப்படும் இயேசுவின் மானிட வரவும், வாழ்வும், மானிடனுக்கே உரிய சிக்கல்களும் அன்றாடங்களும் நிறைந்தவை என்று காட்சிப்படுத்துகிறார்.*

*யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுகளுக்காக யூத ஆசாரிகளிடம் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான் என்பது விவிலியத்தின் வழி பரவலாக அறியப்படும் கதையாகும் (காண்க: லூக்கா 22: 3-5, 47-48, விவிலியம்). ஆனால், இந்நாவலில் யூதாஸ் வெள்ளிக் காசுக்காக அவரைக் காட்டிக்கொடுப்பதில்லை. தன் இனத்தின் இலட்சியத் தேவைக்காகவே அவரைச் சுட்டிக்காட்டுகிறான். ரோமக் காவலாளிகள் அவரைக் கைதுசெய்ய முயலும்போது இயேசு தன் வலிமையை வெளிப்படுத்துவார் என்றும் அது புரட்சிக்கான அடித்தளமாய் அமையும் என்றும் நினைத்து யூதாஸ் அப்படிச் செய்கிறான். ஆனால், எதிர்பாராவண்ணம் அவன் செயலுக்கு வெகுமதியாக அவன்மீது எறியப்படும் வெள்ளிக் காசுகள் அவனுக்கான காட்டிக்கொடுப்புக் கூலியென வரலாற்றில் நிரந்தரமாய்த் தங்கிவிட்டன என மாற்று வரலாற்றுக் கோணத்தை முன்வைக்கிறார், நாவலாசிரியர்.*

*யூதாஸ் மனமுவந்துதான் இயேசுவைப் பணத்திற்காகக் காட்டிக் கொடுத்தான்; சாத்தான் அவன்மீது ஏறிக்கொண்டதால் காட்டிக்கொடுத்தான்; விவிலியப் பழைய ஏற்பாட்டில் கூறியது நிறைவேறும் பொருட்டுக் காட்டித்தந்து காலத்தின் கைதியானான் என்று பலவிதமாகப் பேசப்படும் விவிலிய காரணங்களை நிராகரித்து மாற்று அரசியல் காரணத்தை முன்வைக்கிறது நாவல்.*

***மெய்யியல் கூறுகள்:***

*யூதாஸ், இயேசுவை தான் காட்டிக்கொடுத்ததால்தான் அவர் மரணமடைந்தார் என்று குற்றவுணர்வு கொள்கிறான். அதனால் தற்கொலை செய்துகொள்கிறான். ஆனால், அன்பைத் தன் வாழ்நாளெல்லாம் போதித்த இயேசு தன்னை மன்னித்திருப்பார் என்பதை சீடனாகிய யூதாஸே மறந்துவிட்டான். அல்லது அந்த மன்னிப்பிற்கு தான் உகந்தவனல்ல என்று நினைத்து கணநேர புத்திப்பிறழ்வால் எடுத்த முடிவின் விளைவாக, 'காட்டிக்கொடுத்த யூதாஸ்,' என வரலாறு நெடுகிலும் துரோகத்தின் அடையாளமாக முத்திரை*

குத்தப்பட்டுவிட்டான். யூதாஸை மன்னிக்க முடியாதவன் இயேசுவை ஏற்காதவன் என்று மன்னிப்பைப் பிரதானமான இறைகுணம் என வெளிப்படுத்தி இந்நாவல் நிறைவடைகிறது.

'ஔவிய நெஞ்சம்' மெய்யியலைவிட உளவியல் பார்வையையே முன்வைக்கும் ஆக்கமாக உள்ளது. குற்றம், குற்றத்திற்குப் பின்னான வேதனை, வேதனையின் தீர்வு என உளவியல் காரணங்களே விசாரிக்கப்பட்டுள்ளன. இந்நாவலில் வேதனையின் தீர்வாக, சுய கழிவிரக்கம் மிகுந்து தற்கொலை செய்துகொள்கிறான், யூதாஸ். இருப்பினும், கிறித்துவ நோக்கில் மன்னித்தல், ஏற்றுக்கொள்ளல் என்னும் பண்பை யூதாஸின் மரணத்தை வைத்துப் பேசுவதாலும் இயேசுவைக் கதாபாத்திரமாகக் கொண்டிருப்பதாலும் இது மெய்யியல் பாற்பட்ட நாவலாக்கமாக உருக்கொள்கிறது.

*“சமய முறைமைகளைக் கடைப்பிடிப்பதில் மிகுந்த பற்றுக்கொண்ட எஸ்ஸீனியர்களின் வழிவந்தவர் யோவான். அவர்கள் தான் காடுமலைகளில் துறவுற்றுத் திரிவார்கள். பிரம்மச்சரியம் பேணுவார்கள். தவமிருப்பார்கள். அங்குதான் இயேசுவின் சீடன் யோவானின் பூர்வீகமும்.”* (அமலன் ஸ்டான்லி, ஔவிய நெஞ்சம், ப. 40) என்று ஆசிரியர், அதிகம் அறிந்திடாத எஸ்ஸீனியர்கள் பற்றிய குறிப்பை அறியத் தருகிறார். தவமும் பிரம்மச்சரியமும் மேற்கொண்டதால் இயேசுவும் எஸ்ஸீனிய வகுப்பைச் சேர்ந்தவரோ என்கிற ஐயம் எழுகிறது.

*”எபிபானஸ் கூறுவதுபோல எஸ்ஸீனியர்கள், நஸ்ரின்கள் அல்லது நசரேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். பிரிவு என்ற பொருளுடைய நஸீர் என்ற சொல்லிலிருந்தே அச்சொற்கள் வடிவம் பெற்றன.”* (கிறிஸ்துவும் கிருஷ்ணனும் கற்பனையே, ப. 39) என்று ஜோசப் இடமருகு கூறுவது இக்கேள்விக்கு விடையளிக்கிறது.

சமய நூல்களின் அடிப்படையிலான வரலாற்றை இந்நாவல் மறுவார்ப்புச் செய்திருந்தாலும், அதன் இடைவெளிகளை நிரப்பும் புனைவானது கற்பனையாக மட்டும் இருந்துவிடாமல் வரலாற்றில் அதிகம் எழுதவோ விவாதிக்கப்படவோ செய்யாத பக்கங்களை முன்வைக்கின்றன. அவ்வகையில், கிறித்துவை எஸ்ஸீனியராகப் பொருத்திப் பார்க்க வைப்பது, முதன்மையான மறையம்சம் எனலாம்.

அறிவாராய்ச்சியியல் அளவையின்படி மெய்யியல் பிரதியை ஆராய்ந்தால்தான் ஒரு குறிப்பிட்ட தத்துவப் பின்புலத்திற்கான அறிவு மூலங்கள், இயல்பு, அறிவின் வடிவங்கள், தர்க்க முறைகள், ஆன்மம், காலம், உயிர், மனம், மறுபிறப்பு, விதி போன்றவற்றைக் குறித்து அச்சமயம் கொண்டுள்ள கொள்கைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்நாவலில் இயேசுவின் வாழ்க்கை, ஊழியம், அதிசயம், அரசியல் எனப் பலவும் பேசப்பட்டிருந்தாலும் கிறித்துவத்தின் அடிக்கல் என்று பார்க்கப்படும் திரித்துவம் குறித்த எந்த விசாரணையும் இல்லை. இயேசுவின் இயற்கைக்கு மாறான பிறப்பு, உயிர்த்தெழுதல் போன்றவற்றின் மீதும் எவ்விதத் தேடலுமின்றி, யூதாஸின் வழி மன்னிப்பை இறைகுணம் எனப் பேச முற்பட்ட பிரதியாகவே முடிவடைகிறது. இயேசு உவமைகளால் முன்வைத்த தத்துவங்களையோ, கோட்பாட்டையோ, மனித இயல்நெறியையோ விளக்கிப் பேசக்கூடிய அம்சங்கள் எதுவுமின்றி; தத்துவக் கோட்பாடுசார்ந்த கேள்விகளுக்கும் ஆராய்ச்சிக்கும் பதில்தரும் பக்கங்களின்றி, கிறித்துவைக் கதாப்பாத்திரமாகக் கொண்டு உளவியல் சார்ந்து எழுதப்பட்டுள்ள மெய்யியல் ஆக்கமாக மட்டுமே 'ஔவிய நெஞ்சம்' எஞ்சுகிறது.

***ஆ) வளன் எழுதிய 'யூதாஸ்'***

***கதைக்களம்:***

*யூதாஸ் நாவல் இரு கதைகளைக் கொண்டதாக உள்ளது. முதலாம் கதையில், பாஸ்டன் நகரில் கியாரா என்ற கத்தோலிக்கப் பெண் சந்திக்கும் மதரீதியிலான அத்துமீறல்களும் அதன் அதிகார வலைப்பின்னுலுமெனப் பயணிக்கிறது. கியாரா தன் காதலன் ஜூடுடனான காதலின் வழி தான் சந்திக்க அவமானங்களையும் கசப்புகளையும் கடந்து வாழ்கிறாள். இரண்டாம் கதை, இயேசுகாலத்து வரலாறாகப் புனையப்பட்டுள்ளது. விவிலியத்தில் இருக்கும் கதைகளைப் பிரதியெடுக்காமல், 'ஔவிய நெஞ்சம்' நாவலைப் போலவே இதுவும் இடைவெளிகளை, அக்காலச்சூழலின் பின்னடுக்குகளை வெளிக்கொணரும் புனைவாக வந்துள்ளது. கலிலேயராக வடக்கில் வளரும் இயேசுவை, யூதேயனாக தெற்கில் வளரும் யூதாஸால் இயல்பிலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கான காரணமான இருபிரிவினரையும் கிரேக்கர் – ரோமர் என வெவ்வேறு இனத்தவர் ஆட்சி செய்வதையும் வளன் முன்னிறுத்திப் பேசியுள்ளார்.*

*இரு கதைகளையும் ஒரே நாவலாக எழுதும் எழுத்தாளனுக்கு நெருக்கமாகிறாள் கியாரா. அவள்மூலம் நவீன நிறுவனப்பட்ட கத்தோலிக்க மதத்தின் செயல்பாடுகளையும், வரலாற்றுப் புனைவின்மூலம் யூதாஸின் பயணத்தையும் பற்றிய அறிமுகம் கிடைக்குமாறு நாவல் எழுதப்பட்டுள்ளது. ஒரு சமகாலக் கதையைத் தொடர்ந்துவரும் அடுத்த அத்தியாயம் வரலாற்றுக் கதை எனப் பயணிக்கும் நாவலின் இணைப்புச் சரடு, கதைசொல்லியான எழுத்தாளனுக்கும் கியாராவுக்கும் உள்ள நட்பு மட்டும்தான்.*

***வரலாற்றுப் பதிவுகளின் இடைவெளியை நிறைக்கும் புனைவு:***

கிறித்துவச் சமய வரலாற்றுப் பதிவுகளிலிருந்து முதன்மையாக இந்நாவல் வேறுபடுமிடம், யூதாஸின் மரணம்தான். *"அப்போது அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்," மத்தேயு (27:5), "... அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான். அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று," (அப்போஸ்தலர் 1:18, பரிசுத்த வேதாகமம்)* என யூதாஸ் குற்றவுணர்வினாலும் சுய கழிவிரக்கத்தினாலும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டான் என்று விவிலியம் குறிப்பிட்டிருப்பினும், யூதாஸ் மரணிக்காமல் பழங்குடியினர் மத்தியில் வாழ்ந்து அங்கே கிறித்துவை போதித்து இறை ஊழியம் செய்தார் என்று புனைந்துள்ளார், நாவலாசிரியர்.

பாரம்பரிய விவிலியத்தில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வர் எழுதிய சுவிஷேசங்கள் ***(Gospels)*** மட்டுமே இடம்பெறுகின்றன. ஆனால் *1945*-இல் எகிப்திலுள்ள நாக் ஹம்மாதி ***(Nag Hammadi)*** நூலகத்தில் இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமையார் ***(Thomas)*** எழுதிய சுவிஷேசம் கண்டெடுக்கப்பட்டது. அக்கண்டுபிடிப்பு உண்டாக்கிய சலனங்களே ஓயாதிருக்கையில், சமீபத்தில் *2006*ஆம் ஆண்டு நேஷனல் ஜியாகிராபிக் சொசைட்டியால் யூதாஸின் சுவிஷேசம் முதன்முதலில் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியானது. *'இந்நூல் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ளது. இது யூதாஸை இயேசுவின் போதனைகளை முழுமையாக உணர்ந்துகொண்ட சீடனென்ற மாற்றுப் பார்வையை முன்வைக்கிறது'* என்று குறிப்புத் தருகிறது பிரிட்டானிக்கா. *(காண்க: https://www.britannica.com/topic/Gospel-of-Judas)*

அதன் அடிப்படையில் யூதாஸ் மரணிக்கவில்லை என்ற புள்ளியிலிருந்து நாவலை விரிவாக்கியுள்ளார் ஆசிரியர் வளன்.

*"பகைவனையும் நேசி என்று சொன்னவர் தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாஸை மன்னிக்காமல் இருப்பாரா?" (வளன், யூதாஸ், ப.155)* என்ற கேள்வியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நாவல், யூதாஸ் வயது முதிர்ந்து இறக்கும் தருவாய்வரை பழங்குடி மக்களிடையே வாழ்ந்து இயேசுவின் வார்த்தைகளைப் போதனை செய்துகொண்டும் அற்புதங்களை நிகழ்த்திக்கொண்டும் வாழ்ந்ததாக மாற்று வரலாற்றைப் புனைவாக்கி உள்ளார்.

**மெய்யியல் விசாரணைகளும் மரபார்ந்த நம்பிக்கைகளும்:**

இயேசு இந்நாவலில் தேவ மைந்தராகவும் மனுகுலத்தின் மீட்பராகவும் படைக்கப்பட்டுள்ளார். அவர் தனக்கு நிகழப்போகும் சிலுவை மரணம் குறித்து முன்பே அறிந்தவராக உள்ளார்.

*"இயேசு மௌனமாகச் சிரித்துக்கொண்டிருக்கிறார். பின் யூதாஸை நோக்கி, "என் கோப்பையில் நிரம்பியிருக்கும் திராட்சை ரசத்தின் கடைசித் துளி நீ. உன்னால்தான் என் கோப்பை முழுமையடைகிறது," (மேலது, ப. 27, 28)* என்னும் வரிகளின்மூலம் யூதாஸைத் தன் சீடனாகத் தேர்ந்தெடுத்தபோதே அவன் தன்னைக் காட்டிக்கொடுப்பதற்காகப் பிறந்தவன் என அறிந்துதான் இயேசு சேர்த்திருக்கிறார் என்று அறிந்துகொள்ள முடிகிறது. யூதாஸால்தான் தன் அவதரிப்புக்கான நோக்கம் முழுமையடையப் போகிறது என்கிறார். அதாவது தன்னைக் காட்டிக்கொடுப்பவன் யார் எனத் தெரிந்தும் இயேசு அவனை உடன் வைத்து அன்புப் பாராட்டியுள்ளமையே, யூதாஸ் காலத்தின் கருவிதான் என்பதன் சான்றாகவுள்ளது. யுத்த களத்தில், கிருஷ்ணன் அர்ஜுனனிடத்தில் 'நீ வெறும் கருவிதான். கர்மத்தைச் செய்பவன் நானே. அம்பைச் செலுத்து' என்று சொல்வதைப்போல், யூதாஸ் இயேசுவினால் முன் குறிக்கப்பட்ட அம்பாக இருக்கிறான். மற்றொரு பார்வையில் இயேசு உண்மையின் குறியீடு என்றால், யூதாஸ் சந்தேகத்தின் – குழப்பத்தின் – குறியீடு என்றும் பொருள்கொள்ள இடமுண்டு. இயேசுவின் நற்செய்திகளில் மன்னித்தலும் முதன்மையான அம்சங்களில் ஒன்று என்றால் யூதாஸ் தன்னைக் காட்டிக்கொடுக்கும் முன்பே அவர் அவனை மன்னித்திருப்பார். ஏனெனில், *"... அன்போ சகல பாவங்களையும் மூடும்" ( நீதிமொழிகள் 10:12, பரிசுத்த வேதாகமம்)* என்பது கிறித்து வருகைக்கு முன்பே போதிக்கப்பட்டுவரும் நற்குணங்களில் ஒன்றாகும்.

தன்னால் இயேசு சிலுவையில் துன்பம் அனுபவித்து மரணமடைந்தார் என்ற சுமையால் ஊருக்குள் இருக்கமுடியாமல் சுற்றித் திரிகிறான் யூதாஸ். இயேசுவினுடைய பிற சீடர்களும் தோழர்களும் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. முழுக்கவே அலைக்கழிக்கப்பட்ட வாழ்வை வாழ்ந்துகொண்டிருப்பவனோடு, இறைவன் கனவுகளின் மூலமாக உரையாடுகிறார். உடைந்துபோன அவன் மனதைத் தேற்றுகிறார். அப்படியான ஒரு கனவில்தான் யூதாஸ் தான் உறங்கும் பாறை பிளக்கப்பட்டுப் பாதாளத்தில் வீழ்கிறான். அக்கனவில் ஆதாமின் முதல் மகனான காயின் வருகிறார்.

காயினைக் குறிப்பிடும் அடையாளமாக, *"அவருடைய நெற்றியின் மையத்தில் சில வினாடிகளுக்கொருமுறை மின்னல் ஒன்று புருவங்களுக்கு மத்திவரைக்கும் தோன்றி மறைந்துகொண்டிருந்தது" (வளன், யூதாஸ், ப. 109)* எனக் குறிப்பிடப்படுகிறது. காயின் தலையில் தெரியும் இவ்வடையாளம் என்பது இறைவனால் போடப்பட்டது. அது காயின்

*தனது தமையன் ஆபேலைக் கொன்றதன் நிமித்தமாகப் போடப்பட்டது. இது விவிலிய ஆதியாகமத்திலுள்ள தொன்மக் கதையாகும். அக்கதைக்கூறு அறிந்தோருக்கே நன்குணரக்கூடிய இடமாக, இவ்வடையாளம் பற்றிய வரிகள் இடம்பெற்றுள்ளன. அத்தெளிவில்லாக் கனவுப் பாதாளத்தில் காயின், ஆதாம், பெத்ஷபா உள்ளிட்ட பல விவிலிய மாந்தர்களை யூதாஸ் காண்கிறான். இறுதியில் அங்கே கிறித்துவும் வருகை தந்து, ஆதாமை நெருங்கி, "உன் கடவுளான நான் உன் பொருட்டு உன் மைந்தனாக அவதரித்தேன். உன்மீதும் உன் வழி வந்தவர்கள் மீதும் கொண்ட அன்பினால் என் அதிகாரத்தைக் கொண்டு அடிமைப்பட்டவர்கள் விடுதலையடையவும் இருளில் வாழ்பவர்கள் ஒளியைக் கண்டடையவும் தூங்கிக் கொண்டிருப்பவர்கள் விழித்தெழவும் கட்டளையிடுகிறேன். உறங்கிக்கொண்டிருப்பவர்களே உயிர்த்தெழுங்கள்..." (மேலது, ப.110) என்கிறார். சொர்க்க, நரகம் என்பது இரண்டாம் ஆதாமான இயேசுவின் உயிர்த்தெழலுக்குப் பின்புதான். அதுவரை மரணித்தவர்கள் சொர்க்கமும் நரகமும் இல்லாத பாதாளத்தில் இருப்பார்கள் என்பது கிறித்துவ நம்பிக்கை. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரணித்தபின், அவர்களை அப்பாதாளத்தில் வந்து சந்தித்து முதல் மனிதனான ஆதாமின் மாம்ச பாவத்தை நீக்கியுள்ளார் என்பதாக நாவல் பதிவுசெய்கிறது.*

*ஆனால் இறைவனே மனிதனாகப் பிறந்துவந்துதான் சரிசெய்யமுடியும் என்றால் ஆதாம் செய்த பாவம் என்ன? விலக்கப்பட்ட கனியைச் சாப்பிட்டது அதாவது இறை ஆணையை மீறியது அத்தனை பெரிய குற்றமா? அப்படியே குற்றமென்றாலும் அதற்காக ஏன் மனுகுலமே தண்டிக்கப்பட வேண்டும் போன்ற கேள்விகளின் மேல் எவ்விதக் கவனமும் குவியாமல் யூதாஸை மையப்படுத்தி மட்டுமே நாவலின் மெய்யியல் தளம் விரிகிறது.*

*யூதாஸ், ஏற்கனவே நம்பிக்கையின்மையால் இயேசுவைக் காட்டிக்கொடுத்த குற்றவுணர்வுக்குத் தளைப்பட்டுள்ளான் என்பதால் அவன் தனது நம்பிக்கையைச் சந்தேகிக்கக்கூடிய கேள்விகளை எழுப்பிக் கொள்வதில்லை. கிறித்துவ இறையியலையும் அதன் நம்பிக்கையையும் உள்ளபடியே பதிவுசெய்யும் நாவலாக 'யூதாஸ்' உள்ளது என்பதை மத நம்பிக்கைக்கு எதிராகப் பேசும் கியாராவுக்குப் பதிலளிக்கும் ஜுடின் கிழ்காணும் மறுமொழியினால் புரிந்துகொள்ளலாம்,*

*"கடவுள் இருந்தால் இதையெல்லாம் நடக்க அனுமதிப்பாரா என்று புலம்புகிறோம். கடவுள் இல்லை என்று வைத்துக்கொண்டாலும் வன்முறைகளில் இருந்து நம்மால் தப்பிக்க முடியவில்லைதானே?" (மேலது, பக். 163).*

**முடிவுரை:**

*அதிகாரம் அன்பு வழியின் முதல் தடை என்பதை யூதாஸ் நாவலும், மன்னியாமை இறையறிதலின் தடைக்கல் என்பதை ஔவிய நெஞ்சம் நாவலும் முதன்மையாக முன்வைக்கின்றன. இரு நாவல்களிலும் கிறித்துவச் சமயத் தொன்மைக்கூறுகளும் இறையியல் அம்சங்களும் இருந்தாலும் அதுவே பிரதானமாய்ப் பேசப்படவோ விசாரக்கப்படவோ இல்லை. ஏனெனில், இரு நாவல்களிலும் யூதாஸே மையமாக உள்ளான். இரண்டும் யூதாஸ் கிறித்துவினால் மன்னிக்கப்பட்டுவிட்டான் என இயேசுவின் போதனை வழி நின்று வாதிடுகின்றன. புது வரலாற்றுக் கோணமும் மெய்யியல் பார்வையும் இடம்பெற்றிருப்பினும் முழுமையாய் அமைந்திருக்கவில்லை. இரு நாவலும் இயேசுவை இறை மைந்தன், இறை அவதாரம் என்ற சமயப் பார்வையில் மட்டுமே அணுகுவதால் இசுலாமியர்கள் இயேசுவை 'இறைத்தூதர்' என்று முன்வைக்கும் பார்வைக்கும், பிற மதத்தினர், 'இயேசு கடவுள் இல்லை; ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த ஞானி மட்டுமே'*

என்று முன்வைக்கும் பார்வைக்கும் விளக்கம்தரும் தேடலும் தர்க்கமும் நிறைந்த ஆக்கங்களாக அமையவில்லை.

தர்க்கங்களும் அறிவுக் கோட்பாடுகளும் சூழாதபடி நம்பிக்கையின் பாற்பட்டு அமைந்த படைப்புகள் என்பதால் அறிவாராய்ச்சியியல் நோக்கில் அணுக இயவில்லை. கிறித்துவச் சமயத்தின் நம்பிக்கைகளுக்கு உட்பட்டு பக்தி பாவத்தின் அடிப்படையில் வரலாற்றுக் கால அரசியலைப் பேசி அமைந்திருக்கிறது ‘ஔவிய நெஞ்சம்’ நாவல். ‘யூதாஸ்’ நாவலோ சமகால கத்தோலிக்க பாதிரியார்கள் மற்றும் அமைப்பின் குற்றங்களை விவரித்து இலட்சியக் கிறித்துவம் என்று சொல்லப்படும் கிறித்து காலத்து அன்பு கோட்பாட்டை உயர்த்திப் பிடிப்பதாக அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்:**


1. **அமலன் ஸ்டான்லி**, ***ஔவிய நெஞ்சம்***, **தமிழினி பதிப்பகம்**, **சென்னை**, **முதலாம் பதிப்பு** *2022*.
2. **கந்தசாமி ந. சோ**, ***தத்துவ நோக்கில் தமிழிலக்கியம்***, **மெய்யப்பன் பதிப்பகம்**, **சிதம்பரம்**, ஏழாம் பதிப்பு *2005*.
3. **சி. இராமலிங்கம்**, ***அறிவியல் சார்ந்த மெய்ப்பொருளியலின் தோற்றம்***, **தமிழ்நாட்டுப் பாடநூல் நிலையம்**, **சென்னை**, **முதலாம் பதிப்பு** *1973*.
4. **சுந்தர் சருக்கை**, ***அறிவியல் என்றால் என்ன?*** **சீர்மை வெளியிடு**, **சென்னை**: **முதலாம் பதிப்பு** *2022*.
5. ***பரிசுத்த வேதாகமம்***, **தி பைபிள் சொசைட்டி ஆஃப் இந்தியா**, **பெங்களூர்**.
6. **ஜோசப் இடமருகு**, ***கிறிஸ்துவும் கிருஷ்ணனும் கற்பனையே***, **அலைகள் வெளியீட்டகம்**, **சென்னை**, **தமிழில் முதலாம் பதிப்பு** *2008*.
7. **வளன்**, ***யூதாஸ்***, **எழுத்து பிரசுரம்**, **சென்னை**, **முதலாம் பதிப்பு** *2021*.


**இணையதளம்:**


1. ***https://www.britannica.com/topic/Gospel-of-Judas***